# ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சி.

## 2024/25 மற்றும் 2025/26ஆம் ஆண்டுகளுக்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

**2024/25 மற்றும் 2025/26ஆம் ஆண்டுகளில் பண்டங்களை/சேவைகளை வழங்குவதற்காக ஹற்றன் நஷனல் வங்கியில் பதிவுசெய்ய விரும்பும் பிரபல பொருள் வழங்குநர்கள்/சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**2024/25 மற்றும் 2025/26ஆம் ஆண்டுகளுக்காக வழங்குநர்களைப் பதிவுசெய்தல்/பதிவைப் புதுப்பித்தல்**

பொருள் வழங்குநர்கள்/சேவை வழங்குநர்கள் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைவாக HNB உடன் பதிவுசெய்துகொள்ள/பதிவைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். வழிகாட்டுதல்களையும் பதிவுக்கு அல்லது புதுப்பித்தலுக்கு தேவையான ஆவணங்களையும் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் இணைப்புகளில்/URLகளில் ஒன்றைப் பயன்படுத்தவும்.

01. https://www.hnb.net /e-tendering
02. வங்கியின் வலைத்தளம் **(www.hnb.net)** அத்துடன், வலைத்தளத்தின் அடியிலுள்ள e-Tendering இணைப்பை அழுத்தவும்.

| | |
|---|---|
| **புதிய பொருள் வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்களை பதிவு செய்தல் மற்றும் தற்போதுள்ள வழங்குநர்களின் பதிவைப் புதுப்பித்தல்** | a) பதிவுகளைப் புதுப்பிப்பதற்கான பாவனையாளர் கையேடு, வங்கியின் e-Tendering portalஇல் கிடைக்கும்.<br>b) பொருள் வழங்குநர்கள்/சேவை வழங்குநர்கள், வலைத்தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள பிரிவுகள்/ பண்டங்களுக்கு அமைவாக பண்டங்கள்/சேவைகளுக்கான பதிவுகளைச் செய்துகொள்ள வேண்டும். **ஒவ்வொரு பிரிவுக்கும்** மீளப்பெற முடியாத கட்டணமாக ரூ.10,000/- அறவிடப்படும்.<br>c) பொருள் வழங்குநர்கள்/சேவை வழங்குநர்கள், அவர்களுடன் வங்கி தொடர்பாடல் செய்யக்கூடிய **ஒரு மின்னஞ்சல் முகவரியை** வழங்க வேண்டும். பதிவு பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கோரல்கள் உள்ளிட்ட விடயங்களில் சகல எதிர்கால தகவல் தொடர்புகளும் இந்த மின்னஞ்சல் முகவரி ஊடாகவே மேற்கொள்ளப்படும்.<br>d) பதிவு/மீள் பதிவுத் திகதியிலிருந்து **2 வருடங்களுக்கு பதிவு செல்லுபடியாகும்.**<br>e) பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள், வங்கி வேலை நாட்களில் மட்டும் **மு.ப. 9.00க்கும் பி.ப. 3.00க்கும் இடையே HNB** டவர், 16ஆம் மாடி, 479, டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 என்னும் முகவரியிலுள்ள **HNB** வங்கிச் சேவைகள் பிரிவுக்குக் கையளிக்கப்பட வேண்டும்.<br>f) மேலுள்ள சரத்து (e)இல் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் தவிர்ந்த நேரங்களில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் முறை: ஆவணங்கள் முறையாக ஒட்டப்பட்ட ஒரு கடித உறையில் இடப்பட்டு, தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள கொள்முதல் பிரிவு சிரேஷ்ட முகாமையாளருக்கு என்று குறிப்பிடப்பட்டு, **தரப்பட்டுள்ள முகவரிக்கு** பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர் பதிவு" என்று குறிப்பிடவும்.<br>g) விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட 10 வேலை நாட்களுக்குள் ஆவணங்கள் கிடைக்கப்பெற்றமைக்கான ஒப்புதல் கடிதத்தை பொருள் வழங்குநர்கள்/சேவை வழங்குநர்கள் பெறுவார்கள். |
| **கொடுப்பனவு** | a) கொடுப்பனவை காசோலை/பண வைப்பு/ஒன்லைன் பரிமாற்றம் /CEFT மூலம் "HNB o/a வங்கிச் சேவைகள்" என்ற தலைப்பிலான இல.003010364772 கணக்கிற்குச் செலுத்தப்படலாம். செலுத்தும் நிறுவனத்தின் பெயர் வரவு வைக்கப்பட்ட பின்னரே ஏற்றுக்கொள்ளப்படும்.(செலுத்தப்பட வேண்டிய தொகை, தெரிவு செய்யப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை x ரூ.10,000/- என்ற அடிப்படையில் கணிக்கப்படும்).<br>b) அத்தகைய கொடுப்பனவுக்கான சான்றாக, வைப்புச் சீட்டின்/பரிமாற்ற ஊர்ஜிதப்படுத்தலின் தெளிவான பிரதி (அச்சுப் பிரதி) HNB வங்கிச் சேவைகள் பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

1. எவ்வித காரணமும் தெரிவிக்காமலே ஏதேனுமொரு விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க வங்கிக்கு உரிமை உள்ளது.
2. மோசடி, போலிப் பொருள்களின் வழங்கல், தரக்குறைவான பொருள்கள், குறைபாடான செயற்றிறன்/செயற்றிறன் இன்மை, நடப்பிலுள்ள சட்ட நடவடிக்கை, விநியோகத் தவறுகை மோசடியான தகவல் வழங்கள் போன்ற காரணங்களுக்காக, பதிவு செய்யப்பட்ட பொருள் வழங்குநர்/சேவை வழங்குநர் ஒருவரை பதிவேட்டிலிருந்து நீக்க/இடைநிறுத்த வங்கி உரிமை உள்ளது.

**முக்கியம்:**

1. விண்ணப்பதாரர்கள் வியாபாரப் பதிவுச் சான்றிதழை/கூட்டிணைப்புச் சான்றிதழை வைத்திருக்க வேண்டும்.
2. வங்கியினால் கோரப்படும் பட்சத்தில், சட்டபூர்வ/சட்ட தேவை என்ற முறையில் பெறப்பட்ட வேறு வகையான சான்றிதழ்களையும் விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
3. வழமையாக, விலைகூறல் மனுக்கள்/கோரல்கள் பதிவு செய்யப்பட்ட பொருள் வழங்குநர்களிடம்/சேவை வழங்குநர்களிடம் இருந்து மாத்திரமே கோரப்படும். எனினும், ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது சேவைக்கு பொருத்தமான வழங்குநர்கள் கிடைக்காத பட்சத்தில், பதிவு செய்யப்படாத பொருள் வழங்குநர்களிடம்/சேவை வழங்குநர்களிடம் இருந்து கோரல்களை கோரும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.
4. தேவையானபோது உடனடியாக விலைகூறல் மனுவைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது கொள்வனவுக் கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரக்குறிப்புகள், மாதிரிகள் அல்லது குறிப்புரைகளுக்கு அமைவாகவும் உரிய நேரத்திலும் பொருள்களை/சேவைகளை வழங்கத் தவறும் அல்லது தரக்குறைவான பொருள்களை வழங்கும் பொருள் வழங்குநர்கள்/சேவை வழங்குநர்கள் வங்கியின் வழங்குநர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்படுவார்கள் தடுக்கப்படுவார்கள்.
5. வழங்குநர் கொடுப்பனவுகள் அனைத்தும் HNBஇல் பேணப்படும் கணக்கு ஒன்றிற்கு மாத்திரமே செலுத்தப்படும்.
6. தனித்துவமான அடையாள இலக்கம் (வழங்குநரின் பயனர் User ID) வியாபாரப் பதிவு இலக்கமாகும். பதிவு செய்யப்பட்ட பின் இந்த இலக்கத்தை மாற்ற முடியாது.
7. பதிவு செய்யப்படும் நேரத்தில் அல்லது கோரல் செயன்முறையின்போது பொருள் வழங்குநரினால்/சேவை வழங்குநரினால் வழங்கப்பட்ட ஆவணங்களின்/தகவல்களின் சரியான தன்மை மற்றும் உண்மைத் தன்மைக்கு அவர்களே பொறுப்பாளியாவார்கள். ஏதாவது பிழையான/மோசடியான தகவல் காணப்பட்டால், அத்தகைய வழங்குநர்கள் தடை செய்யப்படுவார்கள்.
8. இந்த ஆவணத்தில் ஏதேனும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் குறிப்பாக உள்ளடக்கப்படாவிட்டால், ஏதேனும் சர்ச்சைகள் தொடர்பில் இலங்கையின் பொதுவான வணிகச் சட்டம் பிரயோகிக்கப்படும்.

**மேலதிக தகவல்களுக்கு,**
**0112661508/0112661894 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக அல்லது**
**bsdbvc@hnb.lk என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.**

HNB

*நிபந்தனைகளுக்குட்பட்டது.